**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.187/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மகாதேவன் Rtd. SI | Prosecution | LW-7 as PW-5 |
| Father Name | சீனிவாசன் | Defence | |
| Address | சித்தர்காடு | Taluk | மயிலாடுதுறை |
| District | மயிலாடுதுறை | Age | 62/2025 |

Solemnly affirmed by Tmt.. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.09.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் இறுதியாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.012.2023 அன்று பணி ஓய்வு பெற்றுமயிலாடுதுறை சித்தர்காடு என்னும் பகுதியில் வசித்து வருகிறேன். கடந்த 17.11.2018 அன்று வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையதில் உதவி ஆய்வாளாரக பணிபுரிந்த போது நிலையத்தில் புலன் விசாரணையில்இருந்த நிலைய குற்ற எண். 118/2018 பிரிவுகள் 379 IPC and 21 (1)minarals act வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுததுக்கொண்டு அன்றைய தினம் வழக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட வழக்கு கோப்பில் கண்ட மாதிரி வரைபடம் பார்வை மகசர் இரண்டும் ஒன்றாக இருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம் பார்வை மகசர் தயார் செய்யவில்லை பிறகு சாட்சிகள் அன்பழகன் SSI. கோபாலகிருஷ்ணன் SSI வெங்கடேசன், அறிவழகன் ஆகியோரை விாசரணை செய்ய பாஸ்கரன் SSI என்பவரிடம் கூறியதையே என்னிடமுமம் கூறியதால் நான் வாக்கு மூலும் பதிவு செய்யவில்லை.

பின்பு வழக்கில் சம்பந்தப்பட்ட மணலை பார்வையிட்டு பெற்றுகொண்டு சான்று வழங்கிய கேசவராஜ் AE என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஆவணம்அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் காலை 10 மணிக்கு வழக்கின் சட்டப்பிரிவு 379 IPC and 21 (1) minerals act அதனை மாற்றம் செய்து சட்டப்பிரிவு 379 ஆக மாற்றம் செய்தேன். **அந்த**

**சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை அசாஆ.,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினம் 17.11.2018 எதிரி இளைய குமார் மீது 379 இதச படி இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்த காலத்தில் ரோல்கால் காலை 7 மணி முதல் 8 மணி வரை என்றால் சரிதான். வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கர் அவர்களிடம் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரணை செய்தேன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மணல் ஏற்றிவந்த டிராக்டர் பதிவு செய்த FIR மற்றும் கைப்பற்றுதல் மகசரில் எந்த திசையில் இருந்தது வந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த அனைத்து சாட்சிகளையும் மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். செயல்பொறியாளர் கேசவராஜ் என்பவரை தனியாக விசாரித்தேன் என்றால் சரிதான். வரைபடத்தில் பூட்டியிருந்த கூரை வீடு மற்றும் சுப்பையா அவர்களின் தரிசு நிலம் ஆகியோர்களை விசாரிக்க வில்லை என்றால் சரிதான்.

நான் வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையத்தில் 01.07.2018 முதல் 24.11.2018 வரை பணியாற்றினேன் என்றால் சரிதான். அசா.1 புகார் கொடுக்க வேண்டும் என்றால் மேல் அதிகாரியிடம் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்கள் எந்த தேதியில் சான்று அளித்துள்ளார் என்றால் 30.07.2018 ந்தேதி அளித்துள்ளார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஆய்வுக்கு பிறகு தான் 1 யூனிட் மணல் டிராக்டரில் இருந்தது என்று எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

நான் சரியாக விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**